# அருப்புக்கோட்டை நகராட்சி

## நகர்மன்ற அவசரக்கூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் அக்டோபர் மாதம் 31ம் நாள் 2022ம் ஆண்டு ஐப்பசி 14 ம் நாள் திங்கள் கிழமை காலை 10.30 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கெள்ளப்படும்

(ஓம்)திரு.சி.சுந்தரலட்சுமி

இடம்: அருப்புக்கோட்டை — நகர்மன்றத்தலைவர்

நாள்: 29.10.2022 — அருப்புக்கோட்டை நகராட்சி

பொருள்1: ஆணையாளர் அவர்களது அக்டோபர் 2022 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்261

பதிவு செய்யப்பட்டது

பொருள்2: நகராட்சி பொறியாளர் அக்டோபர் 2022 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்:262

பதிவு செய்யப்பட்டது

பொருள்3: பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படிக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பதிவு செய்யப்பட்டவை**

| அக்டோபர் 2022 | |
|---|---|
| பிறப்பு | 32 |
| இறப்பு | 18 |
| இறந்து பிறந்தவை | 0 |

அலுவலககுறிப்பு:-

பதிவு செய்யலாம்.

தீர்மான எண்:263

பதிவு செய்யப்பட்டது

பொருள்4: அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நடப்பாண்டில் செய்திதாள்கள் மூலம் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்படி பொது சுகாதார அவசர அவசியம் கருதி செய்திதாள்கள் மூலம் மக்கள் விழிப்புணர்வு விளம்பரங்கள் வெளியிடப்பட்டதற்கு உரிய உத்தேச செலவு தொகை ரூ.75000/-க்கு (எழுபத்து

ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் விருதுநகரில் புதிய மாவட்ட அட்சியர் அலுவலக கட்டிட அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகைதரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அருப்புக்கோட்டை நகராட்சி சார்பாக நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் வரவேற்பு விளம்பரங்கள் வெளியிடப்பட்டதற்கு உரிய உத்தேச செலவு தொகை ரூ.70000/-க்கு (எழுபதத்தாயிரத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.3064/2021/எச்1

தீர்மான எண்:**264**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்5: இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணரியும் திரு.அ.ல்.அப்துல் காதர் பாழில் என்பவருக்கு இருசக்கர வாகன முன்பணம் ரூ.50000/-ம் (அரசு ஆணை எண் 467.நிதித்துறை நாள்22.09.2009) வழங்கக்கோரியுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட தொகை சம்பந்தப்பட்ட இருசக்கர வாகன நிறுவனத்தின் பெயரில் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5318/2022/பி2

தீர்மான எண்:**265**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்6: நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை (ந.நி.ம) அரசாணை (நிலை) எண் 181 நாள் 19.09.2008ன்படி 2022-2025ம் ஆண்டிற்கான அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன காப்பகத்திற்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமத்திற்கு 13.04.2022 அன்று மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. ஏலக்கேள்விகள் மட்டுமே கோரப்பட்டது. மேற்படி கோரப்பட்ட ஏலக்கேள்விகளின் விபரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலதாரரின் பெயர் | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|
| 1. | ஆர்.சோலையப்பன் | ரூ.1,20,000/- |
| 2. | எம்.தேவி | ரூ.1,15,000/- |

<u>அலுவலககுறிப்பு:-</u>

மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ.1,20,000/- ஆர்.சோலையப்பன் என்பவர் கோரியுள்ளார். இத்தொகையானது அரசு நிர்ணயித்த தொகையினை விட குறைவாக இருப்பதால் மேற்படி ஏலக்கேள்வித்தொகை ரூ.1,20,000/-ஐ ஏற்பது குறித்து அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் எண் 10714/அ1/2014, நாள் 20.06.2022ல் அனுப்பப்பட்டது. மேற்படி கடிதத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஓ.மு.எண்.25669/2022/ஆர்-2, நாள் 23.09.2022ல்

கட்டணம் வசூலினை துறை மூலமோ அல்லது குத்தகை மூலமோ மேற்கொள்வதை விதிமுறைகளுக்குட்பட்டு நகர்மன்றம் முடிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி குத்தகை இனத்திற்கு துறை மூலம் வசூல் செய்வதை விட கூடுதலாக நகராட்சிக்கு வரவிருக்கும் வருவாயை கருத்தில் கொண்டும், துறை மூலம் வசூல் செய்வதற்கு தேவையான பணியார்கள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டும், நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டும் திரு.ஆர்.சோலையப்பன் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ.1,20,000/-ஐ ஏற்று குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிவழங்கலாம். ந.க.எண்.10714/2014/அ1

தீர்மான எண்:**266**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்7: அருப்புக்கோட்டை நகராட்சி சொந்தமான சுக்கிலநத்தம் ரோட்டில் அமைந்துள்ள கலவை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை தரம்பிரிக்கும் நிலையத்தினை இயக்குவதற்கு மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மற்றும் அதற்குண்டான செலவு தொகைக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 203, நாள் 30.08.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 26.07.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் நகல்களின் இணைப்புடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | Sri Shirdi Sai Construction<br>Sivakasi, Virudhunagar | ரூ.7700/- |
| 2. | N.Palanisamy<br>5, Parapatti, Sivakasi<br>Virudhunagar | ரூ.7900/- |

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.7700/- கொடுத்துள்ள Sri Shirdi Sai Construction, Sivakasi ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி மன்றத்தின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்ற அனுமதிக்கலாம். ந.க.எண்.3885/2022/எச்1

தீர்மான எண்:**267**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்8: இந்நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்பணிகள் மேற்கொண்டு பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகைகளை திரும்ப வழங்கக்கோரி ஒப்பந்ததாரரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

| Sl.No. | Year | Name of Work | Amount | Contractor |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2018-19 | Railway Feeder Road & MDR Nagar Drainage Paverblock work (file No.5442/22/b2) | 100000<br>94000 | D.Sivakumar |
| | | | 194000 | |

மேற்படி வைப்புத்தொகை பிடித்தம் செய்யப்பட்டு 3 ஆண்டுகள் முடிவுற்றுள்ள நிலையில் Lapsed Deposit ஆக இருந்து வரும் நிலையில் மேற்படி தொகைக்கு தணிக்கை தடை ஏதும் நிலுவை இல்லாததாலும் மேற்கண்ட தொகை ஒப்பந்ததாரர்க்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5442/22/பி2

தீர்மான எண்:**268**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்9: இந்நகராட்சியில் 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒப்பந்தப்பணிகளுக்கு முன்வைப்புத்தொகையாக அஞ்சல் அலுவலக பிணைபத்திரங்களை திரும்ப வழங்கக்கோரி ஒப்பந்ததாரரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

| S.No. | Bond No. | Amount | Date | Contractor Name |
|---|---|---|---|---|
| 1 | 180 | 16000 | 13.05.2013 | D.Sivakumar |
| 2 | 181 | 30000 | 06.12.2012 | |
| 3 | 182 | 3000 | 12.09.2012 | |
| 4 | 183 | 4000 | 12.09.2012 | |
| 5 | 184 | 28600 | 31.10.2012 | |
| | | 81600 | | |

மேற்படி முன்வைப்புத்தொகை பதிவேடு பக்க எண் 13, 14 மற்றும் வரிசை எண்கள் 180 முதல் 184 வரை அஞ்சல் அலுவலக பிணைபத்திரங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேற்படி பிணைபத்திரமானது 3 ஆண்டுகள் முடிவுற்றுள்ள நிலையில் (Lapsed Deposit Bond) ஆக இருந்து வரும் நிலையில் மேற்படி தொகைக்கு தணிக்கை தடை ஏதும் நிலுவை இல்லாததாலும் மேற்கண்ட அஞ்சல் அலுவலக பிணைபத்திர முன்வைப்புத்தொகை ஒப்பந்ததாரர்க்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5437/2022/பி2

தீர்மான எண்:**269**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்10: நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 30.09.2022ம் தேதிய தொலைபேசி செய்தியில் பூங்கா அமைக்க திட்டபிரேரணனை சமர்பிக்க அறிவுறுத்தியதின் அடிப்படையில் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் E, பிளாக் 3, நகரபுல எண் 11/6ல் உள்ள மாணிக்கம் நகரில் பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி உதவி கோரி பிரேரணனை அனுப்ப மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் E, பிளாக் 3, நகரபுல எண் 11/6ல் உள்ள மாணிக்கம் நகரில் பூங்கா அமைக்கும் பணி | 29.50 |

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5557/2022/இ1

தீர்மான எண்:**270**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்11: நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 30.09.2022ம் தேதிய தொலைபேசி செய்தியில் பூங்கா அமைக்க திட்டபிரேரணனை சமர்பிக்க அறிவுறுத்தியதின் அடிப்படையில் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் F, பிளாக் 11, நகரபுல எண் 33/1, 135, 136ல் உள்ள (சாய்பாபா கோவில் அருகில்) பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதிஉதவி கோரி பிரேரணனை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் F, பிளாக் 11, நகரபுல எண் 33/1, 135, 136ல் உள்ள (சாய்பாபா கோவில் அருகில்) பூங்கா அமைக்கும் பணி | 35.50 |

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.கஎண்5556/2022/இ1

தீர்மான எண்:**271**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்12: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 6, வி.வி.ஆர் காலனி, வார்டு எண் 5 இரயில்வேபீடர் ரோடு (லட்சுமி தியேட்டர் எதிர்புறம்) வார்டு எண் 15, ஆயிரம்கண் மாரியம்மன் கோவில், வார்டு எண் 11, மணிநகரம் ஓடைத்தெரு மற்றும் வார்டு எண் 27 தெற்குரதவீதி ஆகிய தெருக்களில் உள்ள மினிபவர்பம்பு உள்ள கட்டிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் நீர்ஊற்று இல்லாமல் உள்ள மினிபவர் பம்புகளில் உள்ள மின் இணைப்புகளை நிரந்தர துண்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்தொகை ரூ.36,365/-யை தமிழ்நாடு மின்சார வாரித்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>மின் இணைப்புகள் விபரம்</u>

| வ. எண். | மின் இணைப்பு எண் | இடம் | DCக்கான விபரம் |
|---|---|---|---|
| 1 | 203-016-1574 | வி.வி.ஆர். காலனி | தண்ணீர் இல்லாத காரணத்தினால் நிரந்தர துண்டிப்பு |
| 2 | 203-016-1449 | இரயில்வேபீடர் ரோடு (லட்சுமி தியேட்டர் எதிர்புறம்) | தண்ணீர் இல்லாத காரணத்தினால் நிரந்தர துண்டிப்பு |
| 3 | 202-003-505 | ஆயிரம்கண் மாரியம்மன் கோவில் | மினிபவர்பம்ப் கட்டிடம் பராமரிப்பு பணி |
| 4 | 201-014-63 | தெற்குரதவீதி | மினிபவர்பம்ப் கட்டிடம் பராமரிப்பு பணி |
| 5 | 202-004-246 | மணிநகரம் ஓடைத்தெரு | கழிவறை கட்டிட பராமரிப்பு பணி |

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மினிபவர்பம்ப் மற்றும் கழிவறையின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட தொகை ரூ.36,365யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1775/இ2/2012

தீர்மான எண்:**272**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்13: இந்நகராட்சியை எதிர்த்து திரு.ஆர்.சங்கரப்பன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றம், மதுரை பலகையில் (5வது ஊதியக்குழு நிலுவைத் தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகை வழங்கக்கோரி/அவமதிப்பு வழக்கு எண்.பி.(எம்டி) நம்பர்431/2022) வழக்கு தொடர்ந்த வகையில் அதனை நகராட்சியின் சார்பில் வழக்காடிய திரு.என்.திலீப்குமார்,

பி.ஏ.பி.எல். வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.9500/-னை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3383/2020/சி1

தீர்மான எண்:**273**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்14: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் பயன்பாட்டில் இருந்து வந்த வாகன எண் TN 67 AB 6892 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பித்து வாகனத்தில் உள்ள பழுது பணிகள் பார்க்க அரசாணை எண் 983, Home (Transport IV) நாள் 03.08.2004 கனரக வாகனங்களுக்கு 10 வருடங்களுக்கு மேல் பழுது பணிகள் பார்க்க வருடத்திற்கு ரூ.15000/-வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்வதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.185000/-ஆகும். மேற்படி வாகனமானது நகர் பகுதிகளில் குப்பை அள்ளும் பணியினை தினந்தோறும் மேற்கொள்ளுவதால் தேய்மானம் அதிகமாகவும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக பராமரிப்பு செலவினங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டியதும் அத்தியாவசியமாக உள்ளது. எனவே இந்த கூடுதல் செலவீனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உரிய பின்னேற்வு பெறுவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5587/2022/எச்1

தீர்மான எண்:**274**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்15: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் மொத்த 3752 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டுவருகிறது. இதில் 228 LED விளக்குகள் போக மீதமுள்ள 3546 விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றி மின் சேமிப்பு செய்யும் வண்ணம் மாநில நகர்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் (SUIDF) ரூ.311.14 இலட்சம் கடன் தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடனை 6 வருடங்களில், வருடத்திற்கு 5 சதவீதம் வட்டியுடன் திருப்பி வழங்க வேண்டியுள்ளது. எனவே இதற்கென பிரேரணனை தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் சமர்பிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று திட்டப்பிரேரணனை தயாரிக்கப்பட்டு சமர்பித்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.கஎண்.3613/22/இ2

தீர்மான எண்:**275**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்16: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் இல்லாமல் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொது மக்களின் நலன் கருதி 970 எண்ணம் புதிய LED தெருவிளக்குகள் அமைப்பதற்கும் அதற்காகும் செலவு தொகை ரூ.162.00 இலட்சத்தினை அரசிடம் இருந்து முழுவதும் மானியமாக பெற திட்டபிரேரணனை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தெருவிளக்கின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று திட்டபிரேரணனை தயாரிக்கப்பட்டு சமர்பித்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.3613/22/இ2

தீர்மான எண்:**276**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்17: அருப்புக்கோட்டை நகராட்சி காந்திநகர் புறநகர் பேருந்து நிலையம் தென்கிழக்கு மூலையில் உள்ள காலி இடத்தில் புதிய கடைகள் கட்டி நகராட்சி வருமானத்தை அதிகமாக்குமாறு நகர்மன்றத்தலைவர் அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் 25.10.2022 அன்று பொறியாளர் அவர்களுடன் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின்படியும் மேற்படி புறநகர் பேருந்து நிலைய தென்கிழக்கு மூலையில் கடை கட்டுவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.11.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.5984/2022/இ1**

தீர்மான எண்:**277**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்18: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 34 இளைஞர்சங்கம் 3வது தெருவில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22ம் ன் கீழ் நியாயவிலைக்கடை கட்டிடம் கட்டும் பணி ரூ.10.00 இலட்சத்திற்கு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர் அவர்களின் கடித எண் ந.க.எண்.சி3/145/2022, நாள் 29.09.2022ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மாவட்ட வட்ட வழங்கல் அலுவலர் மேற்படி கட்டிடத்தினை ஆய்வு மேற்கொண்டபோது இக்கட்டிடத்திற்கு கூடுதலாக கழிப்பறை மற்றும் கணினி வசதியினை

செய்து தருமாறு கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மேற்படி பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.**5991/2022/இ1

தீர்மான எண்:**278**

நியாயவிலைக்கடையில் கூடுதல் வசதி செய்வதற்காக மதிப்பீடு 11/2 இலட்சத்திற்கு கூடிதலாகக்கூடிய செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்19: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 ரெங்கப்பன் தெரு, வார்டு எண் 2 அம்பேத்கார் தெரு, வார்டு எண் 16 சிவானந்தபுரம் கோவில் தெரு, வார்டு எண் 26 உஜ்ஜி மாகாளியம்மன் கோவில் மற்றும் வார்டு எண் 27 அரசமரத்து தெரு, வார்டு எண் 12 மகாலிங்கம் தெரு ஆகிய இடங்களில் உள்ள மினிபவர்பம்பு கட்டிடங்கள் சேதமடைந்து உள்ளதாலும் மற்றும் ஆழ்துளை கிணற்றில் நீர்வரத்து இல்லாததாலும் இதனை அகற்றிவிட்டு புதியதாக ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மினிபவர்பம்பு அமைக்கும்படி நகர்மன்ற உறுப்பினர், பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.80 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.**6023/2022/இ1

தீர்மான எண்:**279**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்20: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30 ராமுத்தேவர் தெரு, வார்டு எண் 35 சீதகாளியம்மன் தெரு, ராமசாமிபுரம் காலனி 1வது தெரு, வார்டு எண் 36 கீரை கணேஷ் நகர் மற்றும் வார்டு எண் 28 வர்த்தகசங்கம் தெரு ஆகிய இடங்களில் உள்ள மினிபவர்பம்பு கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாலும், ஆழ்துளை கிணற்றில் நீர் இல்லாததால் அதனை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மினிபவர்பம்பு அமைக்கும்படி பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்கள் ஆகியோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொதுமக்கள் நலன்கருதியும், குடிநீரின் அவசியம் கருதி இப்பணி மேற்கொள்வது அவசியமாகும் எனவே இப்பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.00 இலட்சத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.**6024/2022/இ1

தீர்மான எண்:**280**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்21: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் போடப்பட்டுள்ள சிறுபாலங்களில், பழுதடைந்துள்ள சிறுபாலங்களை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைத்துதரும்படி பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர் மற்றும்

நகர்மன்ற தலைவர் அவர்கள் கேட்டதற்கிணங்க பொதுமக்களின் நலன்கருதி இப்பணி மேற்கொள்வதற்கு அவசியமாக உள்ளதால் இப்பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.9.60 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்**.6025/2022/இ1

தீர்மான எண்:**281**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்22: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் போடப்பட்டுள்ள சிறுபாலங்களில், பழுதடைந்துள்ள சிறுபாலங்களை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைத்துதரும்படி பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்கள் கேட்டதற்கிணங்க பொதுமக்களின் நலன்கருதி இப்பணி மேற்கொள்வதற்கு அவசியமாக உள்ளதால் இப்பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.9.10 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்**.6026/2022/இ1

தீர்மான எண்:**282**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்23: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 இரயில்வேபீடர் சாலை மேற்கு (MS Nagar) ராமசாமிபுரம், சாலியர் பள்ளி சாலை ஆகிய பகுதியில் உள்ள மண்சாலை குண்டும் குழியுமாக இருப்பதாலும் மேலும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருந்ததால் இப்பகுதியில் Well Gravel நிரப்பும்படி பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இப்பகுதிகளில் Well Gravel கொண்டு நிரப்புவது அவசியமாகும். எனவே இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்**.6028/2022/இ1

தீர்மான எண்:**283**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்24: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22 பூலூரம்மன் கோவில் தெருவில் (பூலூரம்மன் கோவிலிருந்து ஜவஹர் சங்கம் சத்திப்பு வரை) ஒரு பக்கத்தில் மழைநீர் வடிகால் இல்லாததால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கும் நிலைஉள்ளது. எனவே பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் கேட்டுக்கொண்டதற்குகிணங்க மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.60 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.**6027/2022/இ1

தீர்மான எண்:**284**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்25: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் செயல்பாட்டில் இருக்கும் அடிகுழாய்களை வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட வார்டு பகுதிகளில் உள்ள அடிகுழாய்களை பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.8.00 இலட்சத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.**5735/2022/இ1

தீர்மான எண்:**285**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்26: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30 திருச்சுழி சாலையில் (காசுகடை பஜார்) அமைந்துள்ள அண்ணாசிலையினை சுற்றி உள்ள சாலைகள் மண்சாலைகளாக உள்ளது. இச்சாலைகளுக்கு அருகில் காய்கறி மார்க்கெட் உள்ளதால் பொதுமக்கள் இச்சாலை வழியாக சென்றுவருவது கடினமாக உள்ளது. மேலும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதாரகேடு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியவர்களின் கோரிக்கைக்கு இணங்க இப்பகுதிகளில் சாலை அமைப்பது அவசியமாகும். எனவே இப்பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.**5737/2022/இ1

தீர்மான எண்:**286**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்27: மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 420/செமதொஅ /2022, நாள் 21.09.2022 ன்படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகளை தினமலர் நாளிதழ் சார்பில் சிறப்பு தொழில்மலரில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ.24192/-, தினமலர், மதுரை நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.2775/2022/இ1**

தீர்மான எண்:**287**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்28: மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 403/செமதொஅ /2022, நாள் 05.09.2022 ன்படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகளை தினதந்தி நாளிதழ் சார்பில் ஆயுதபூஜை முன்னிட்டு வெளியிடப்படும் தொழில்மலரில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ.41580/-, The Daily Thanthi, Madurai நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2775/2022/இ1

தீர்மான எண்:**288**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்29: மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 405/செமதொஅ/2022, நாள் 05.09.2022 ன்படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெற்றுவரும் வளர்ச்சி திட்டப்பணிகளை (விளக்கும் விதமாக) ஆயுத பூஜையினை முன்னிட்டு சிறப்பு தொழில் மலர் தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ.20790/-, Kal Publications Pvt Ltd., நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2775/2022/இ1

தீர்மான எண்:**289**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்30: மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 322/செமதொஅ /2022, நாள் 16.06.2022 ன்படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெற்றுவரும் வளர்ச்சி திட்டப்பணிகளை தமிழக அரசின் ஓராண்டு சாதனை விளக்கும் விதமாக மாலைமுரசு நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ.31500/-, Madurai Malai Murasu Private Ltd., நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2775/2022/இ1

தீர்மான எண்:**290**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்31: மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 364/செமதொஅ /2022, நாள் 22.09.2022 ன்படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாலைமலர் "தொழில்மலர் ஆகஸ்ட் 2022" தினதந்தி நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ.19950/-ல், Malar Publication LTD., Madurai நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4747/2022/இ1

தீர்மான எண்:**291**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்32: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட சுக்கிலநத்தம் உரக்கிடங்கின் முன்பு அமைக்கப்பட்டுள்ள சுற்றுசுவரின் முன்புறம் உள்ள Gate பழுதடைந்துள்ளதால் அதனை

மாற்றி புதியதாக Gate அமைக்கவும் மற்றும் Compost Yard அமைந்துள்ள இடத்தில் உள்ள மழைநீர் செல்லும் வடிகாலில் (Channel) மழைக்காலங்களில் மழைநீர் நிறைந்து கலவை உரக்கிடங்கு (Compost Yard) உள்ளே வந்து விடுவதால் அதனை தடுப்பதற்காக தடுப்பு சுவர் அமைப்பது அவசியமாகும். எனவே இப்பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5736/2022/இ1

தீர்மான எண்:**292**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்33: 15வது மாநில நிதிக்குழு (Untied Grant)ன் கீழ் அருப்புக்கோட்டை நரகாட்சி Replacememnt of Existing defective of 3.5 core 70 sq.mm single aluminium armounded cable in to 3.5 core 70 sq.mm aluminium armmounded cable from generatoret collector well at thiruppuvanam head works பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.2.80இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீமான எண் 234, நாள் 21.09.2022 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 07.10.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s. Deccan Industries Coimbatore | மதிப்பீட்டுத்தொகை |
| 2. | M/s.Vel Pumpset, Coimbatore | மதிப்பீட்டினைவிட 2.99% அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள M/s. Deccan Industries, Coimbatore ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.11610/2022/இ1

தீர்மான எண்:**293**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்34: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 9, அஜீஸ்நகர் பகுதியில் உள்ள மணமகிழ்மன்றம் பொதுசுகாதார பணிகளுக்கான தளவாடசாமான்கள் வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது தளவாடசாமான்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட கோட்ட அலுவலகத்திற்கு எடுத்து சென்றுவிட்டபடியால் மேற்படி மணமகிழ்மன்றம் காலியாக உள்ளது. எனவே நகராட்சிக்கு ஏற்படும் வருவாயை கருத்தில் கொண்டு மணமகிழ்மன்றத்தினை மாத வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சிக்கு ஏற்படும் வருவாயை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5683/2022/அ1

தீர்மான எண்:**294**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்35: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 9, அஜீஸ்நகர் பகுதியில் உள்ள மணமகிழ்மன்றத்திற்கு மாத வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள 27.10.2022 அன்று பொதுஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறவில்லை. ஏலம் கோரப்பட்டதில் கேட்கப்பட்ட வரப்பெற்ற இரண்டு ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1. | P.காளீஸ்வரி | ரூ.2800/- |
| 2. | P.ஆதிமூலம் | ரூ.2750/- |

கேட்கப்பட்ட இரண்டு ஏலக்கேள்ளிகளில் திருமதி.P.காளீஸ்வரி என்பவரின் ஏலக்கேள்வி அதிகமாக உள்ளது. மேற்படி ஏலக்கேள்வியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5683/2022/அ1

தீர்மான எண்:**295**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்36: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு கொசு புழு ஒழிப்பு பணிக்காக டிபிசி பணியாளர்கள் 75 நபர்கள் பணியமர்த்தி பணிபுரிந்து வருகின்றனர். மேற்கண்ட டிபிசி பணியாளர்கள் பணிகாலமாக ஏற்கனவே 01.04.2022ம் தேதிவரை நகர்மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. கொரோனா அவசர காலம் மற்றும் தேர்தல் அவசர பணி, வீட்டு வரி கணக்கெடுப்பு பணி போன்ற பணிகள் (கொசு புழு ஒழிப்பு பணியுடன்) தொடர்ந்து கவனித்து வருகின்றனர். மேற்படி டிபிசி பணியாளர்களின் பணியானது தொடர்ந்து வரும் காலங்களில் மழைகாலமாக உள்ளதால் கொசு ஒழுப்பு பணியானது அத்தியாவசியமாகிறது. எனவே மேற்படி டிபிசி பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 75 நபர்கள் வீதம் மாவட்ட ஆட்சியரின் சம்பள விகிதப்பட்டியல்படி நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு ஏற்ப செலவு செய்யவும், மேற்படி பணியாளர்களை எதிர்வரும் 31.01.2023ம் தேதிவரை

பயன்படுத்திக்கொள்ளவும் அதற்குண்டான செலவு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5619/2022/எச்1

தீர்மான எண்:**296**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்37: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு நகர் பகுதிகளில் உள்ள வீடுகளில் கழிப்பறைகளில் இருந்து காற்று குழாய் மூலமாக வெளியேறும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்தும் வகையில் காற்று குழாய்களில் வலைகளை கட்டி முதிர்ந்த கொசுக்கள் வெளியேறுவது தடுக்கப்படும். அதன் அடிப்படையில் நகரில் உள்ள மொத்த வீடுகளுக்கும் கழிப்பறை காற்று குழாயின் வலைகள் கட்ட சுமார் 36000 எண்ணம் நைலான் வலைகள் வாங்க அனுமதியும், அதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ.16.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5992/2022/எச்1

தீர்மான எண்:**297**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்38: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு நகர் பகுதிகளில் அனாதையாக சுற்றி திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்ய வேண்டும் என (Animal Birth Control) DOG Rules 2001ன் விதி – 4ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விதிகளில் தெரிவித்துள்ளபடி நாய்களை கம்பி வலை போட்டு பிடிக்க கூடாது அதற்கு பதிலாக வண்ணத்துப்பூச்சி வலை வத்து (Butterfly Net) தான் பிடிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நாய்களை பிடிப்பதற்கு ஏதுவாக வண்ணத்துப்பூச்சி வலை புதிதாக 6 எண்ணம் வாங்குவதற்கு ஆகும் உதேச செலவுத்தொகை ரூ.30,000/- மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.களண்.5231/2021/எச்1

தீர்மான எண்:**298**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்39: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனிதனியாக பிரித்து கொடுக்கும் வகையில் இத்திட்டத்தினை பொது மக்களிடம் செயல்படுத்த முன்னோடி நடவடிக்கையாக 6 பிரிவிற் ஒரு வார்டு வீதம் 09, 12, 14, 19, 22 மற்றும் 34 ஆகிய வார்டுகளில் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 5623 ஆக உள்ளது. மேற்குறிப்பிட்ட வார்டுகளின் ஒவ்வொரு வீட்டிற்கும் மக்கும் குப்பை பெறுவதற்கு பச்சைகலர் சிறியளவு – 5623 குப்பை கூடைகளும் மற்றும் மக்காத குப்பை பெறுவதற்கு நிலக்கலர் சிறியளவு

5623 குப்பை கூடைகளும் ஆக மொத்தம் 11246 சிறியளவு குப்பை கூடைகள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.கஎண்.5618/2022/எச்1

தீர்மான எண்:**299**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்40: அருப்புக்கோட்டை நகராட்சியில் பதிவுபெற்ற சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (GST) தொகையை (ஜனவரி 2022 முதல் ஆகஸ்ட் 2022 வரை) இணையதளம் மூலம் செலுத்தி நேர்செய்த வகைக்கு தொகை ரூ.11200/-ஐ GST ஆலோசகர் திரு.A.சரவணன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.கஎண்.2178/2022/பி2

தீர்மான எண்:**300**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்41: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள குடிநீர் வாகனம் TN 67 A9212க்கான தகுதிச்சான்று 08.09.2022ம் தேதியுடன் தகுதிச்சான்று முடிவடைந்துவிட்டது. மேற்படி வாகனமானது நகரின் விரிவாக்க பகுதிகளில் மெயின் குழாய் இல்லாத பகுதிகளில் உள்ள பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்பட்டுவருவதால், வாகனத்தின் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கு வாகனத்தில் உள்ள பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்படி பழுது பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை A.S.R.Body Works, Madurai அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும், பழுது பணி மேற்கொள்வதற்கான செலவு தொகை ரூ.1,98,337/- யை குடிநீர் நிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் வாகனமானது நகரின் விரிவாக்க பகுதிகளில் மெயின் குழாய் பதிக்கப்படாத (Distribution Main) பகுதிகளில் உள்ள மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருவதால் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கு வாகனத்தில் உள்ள பழுதுபணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5588/ இ2/22

தீர்மான எண்:**301**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்42: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள குடிநீர் வாகனம் TN67F9587ஐ பொது ஏலத்தில் எடுத்துக்கொள்ள 29.09.2022 அன்று ஏலம் கோரப்பட்டது. மேற்படி ஏலத்தில் கீழ்கண்ட நபர்கள் கலந்து கொண்டனர். ஏலம் கோரியவர்கள் விபரம் மற்றும் ஏல தொகையானது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலதாரரின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.மாணிக்கவாசகம் அருப்புக்கோட்டை | ரூ.73000/- |
| 2. | திரு.எம்.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | ரூ.73,500/ |

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. அதிக ஏலத்தொகை கோரியுள்ள திரு.எம்.காசிவிஸ்வநாதன், ஒப்பந்ததாரரின் ஏலத்தொகையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று அதிக தொகைக்கு ஏலம் கோரிய ஒப்பந்ததாரர் திரு.எம்.காசிவிஸ்வநாதன் அவர்களை முன்வைப்புத்தொகை ரூ.5000/- போக மீதமுள்ள தொகை ரூ.68,500/- அலுவலக கருவூலத்தில் செலுத்த கேட்பு அறிவிப்பு அனுப்பியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.372/இ2/2022

தீர்மான எண்:**302**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்43: அருப்புக்கோட்டை நகராட்சியில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பழைய பொருட்களை ஏலம் விடுவதற்கு 29.09.2022 அன்று ஏலம் கோரப்பட்டது. ஏலம் கோரியவர்கள் விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | பொருள் | அரசு மதிப்பு தொகை | திரு.P.ரமேஷ், மதுரை | திரு.க.முகம்மதுபரக்கத்அலி, விருதுநகர் | செய்யதுரப்பானி செய்யது கலைமான், தூத்துக்குடி | பொ.கந்தசாமி, அருப்புக்கோட்டை |
|---|---|---|---|---|---|---|
| 1 | இரும்பு | 25.00 | 27.00 | 26.00 | 26.50 | 0 |
| 2 | பிளாஸ்டிக் | 12.00 | 14.00 | 0 | 13.00 | 13.50 |
| 3 | தகரம் | 15.00 | 17.00 | 16.00 | 16.50 | 0 |
| 4 | மோட்டார் காயில் | 400.00 | 430.00 | 0 | 410.00 | 420.00 |

மேற்படி கோரப்பட்ட நான்கு ஏலக்கேள்விகளில் அரசு மதிப்புத்தொகையை விட அதிகமாக திரு.P.ரமேஷ் என்பவர் ஏலம் கோரியுள்ள தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

1. அதிகபட்ச ஏலத்தொகை கோரிய திரு.P.ரமேஷ், மதுரை என்பவரது ஏலக்கேள்வியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பொருட்களை அளவீடு செய்து கேட்பு கட்டணத்தொகை செலுத்த அறிவிப்பு அனுப்பியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.5088/2022/இ1

தீர்மான எண்:**303**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்44: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருக்களில் புதியதாக 308 எண்ணம் LED தெருவிளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.3116/2022/அம்ரூத்-2 நாள் 29.03.2022 அன்று நிர்வாக அனுமதியும், 11.05.2022 அன்றைய சுற்றறிக்கையில் இந்நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மானியம் (Untied Grant) நிதியில் ரூ.17.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு, இந்நகர்மன்ற தீர்மான எண் 55, நாள் 20.05.2022ம் தேதி நகர்மன்றத்தில் மேற்படி பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது. மேலும் மேற்கண்ட 308 எண்ணம் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு தற்போதைய மதிப்பீடு ரூ.22.84 இலட்சம் தேவை என்பதால் 15வது நிதிக்குழு மானியம் (Untied Grant) நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நிதி 17.00 இலட்சம் போக மீதத்தொகை ரூ.5.84 இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

1. தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. மான்யத்தொகை ரூ.17.00 இலட்சம் போக மீதி தொகை ரூ.5.84 இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:**304** ந.க.எண்.2365/இ2/2022

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்45: நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண். 24470/2022/MA2, நாள் 08.08.2022ல் நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 24-B24-Hன்படியும் அரசாணை (நிலை) எண் – 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.06.2022 மற்றும் அரசாணை (நிலை) எண் – 93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.06.2022ன்படியும் வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் அதன் செயல்பாடுகளுக்கும் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்தும் விதிகள் மற்றும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகளில் வார்டு குழு அமைப்பதற்கு பகுதி சபா உறுவாவதற்கும் குழு செயலர் நியமனம் குறித்தும் ஆணைகள் வரப்பெற்றுள்ளது. இதுகுறித்து அருப்புக்கோட்டை

நகராட்சி பகுதியில் உள்ள மொத்தம் 36 வார்டுகளில் ஒரு வார்டுக்கு 4 வார்டு குழு அமைக்க மேற்கண்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்டுள்ள வார்டு உறுப்பினர்கள் அன்னார்களின் பகுதிகளில் உள்ள உள்ளாட்சி தேர்தலில் வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி அடிப்படையில் ஒரு வார்டுக்கு 4 உறுப்பினர்கள் வீதம் தேர்ந்தெடுக்கவும் மற்றும் அரசாணையில் சுட்டிக்காட்டியுள்ளபடி வார்டு குழு அமைப்பதற்கும் மற்றும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உரிய அனுமதிக்காக மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம் மற்றும் மேற்கண்ட விபரம் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வார்டு குழு மற்றும் பகுதி சபாவாக பிரிக்கப்பட்டதை மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4722/2022/எப்1

தீர்மான எண்:**305**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்46: அண்ணா பல்கலைகழகம், சென்னை அவர்களது அக்டோபர் 2022ன் அறிக்கையின்படி அருப்புக்கோட்டை நகராட்சி சுக்கிலநத்தம் உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி, பழைய குப்பைகளை (Legacy Waste) Bio Mining முறையில் தீர்வு செய்யும் பணிக்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி உதவி வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குர், சென்னை அவர்களுக்கு பிரேரணனை அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | அருப்புக்கோட்டை நகராட்சி சுக்கிலநத்தம் உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி, பழைய குப்பைகளை (Legacy Waste)Bio Mining முறையில் தீர்வு செய்யும் பணி | 255.00 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று திட்டப்பிரேரனை அனுப்பியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.3729/2022/இ1

தீர்மான எண்:**306**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்47: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியின் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 87722 ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் 36 வார்டுகள் உள்ளன. நகரின் மொத்த பரப்பளவு 14.96 சதுர கி.மீ. சாலைகளின் மொத்த

நீளம் 125.079 கி.மீ. ஆகும். அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள செவல்கண்மாய் ஓடையினை மேம்படுத்தி பொது மக்கள் நடைபயிற்சி மேற்கொள்வதற்கு உதவியாக உரிய நிர்வாக அனுமதி மற்றும் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிதி உதவி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-23 | | |
| 1. | அருப்புக்கோட்டை நகராட்சி Ward : A, Block : 13 செவல்கண்மாய் ஓடையினை மேம்படுத்தும் பணி | 160.00 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று திட்டப்பிரேரணை அனுப்பியதையும் மனறம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.5081/2022/இ1

தீர்மான எண்:**307**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்48: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியின் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 87722 ஆகும். இந்நராட்சியில் மொத்தம் 36 வார்டுகள் உள்ளன. நகரின் மொத்த பரப்பளவு 14.96 சதர கி.மீ சாலைகளின் மொத்தத நீளம் 125.079 கி.மீ. ஆகும். அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள திருச்சுழி ரோடு ஊரணியினை மேம்படுத்துவதற்கு உதவியாக உரிய நிர்வாக அனுமதி மற்றும் எதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிதி உதவி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிதப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-23 | | |
| 1 | அருப்புக்கோட்டை நகராட்சி TS No.68, Block:17 Ward :E திருச்சுழி ரோடு ஊரணியினை மேம்படுத்தும் பணி | 54.00 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத்ததலைவரின் முன்அனுமதி பெற்று திட்டப்பிரேரணை அனுப்பியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.00577/2022/இ1

**தீர்மான எண்:308**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்49: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியின் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 87722 ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் 36 வார்டுகள் உள்ளன. நகரின் மொத்த பரப்பளவு 14.96 சதுர கி.மீ. சாலைகளின் மொத்த நீளம் 125.079 கி.மீ. ஆகும். முதன்மை குடிமை மருத்துவர் அரசு மருத்துவமனை, அருப்புக்கோட்டை அவர்களின் கடித ந.க.எண்.1120/P&D/2021 நாள் 09.05.2022ன் படி அரசு மருத்துவமனை வளாகத்தில் நகர்புற வீடற்றோருக்கான தங்குமிடம் கட்டும் பணி கட்டித்தரும்படி கேட்டதற்கிணங்க NULM 2022-23 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதத்தின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை சமர்பிக்கப்ப்ட்டதனை நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை சமர்பிக்கப்பட்டதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 20800/2021/UPA நாள் 13/10/2022ன்படி உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிதப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-23 | | |
| 1 | அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை வளாகத்தில் நகர்புற வீடற்றோருக்கான தங்குமிடம் கட்டும் பணி | 100.00 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண்.2220/2022/இ1

தீர்மான எண்:**309**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்50: அருப்புக்கோட்டை நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய 48 எண்ணம் மினிபவர் பம்புகளில் உபயோகத்தில் இல்லா 20 இடங்களில் நிரந்தரமின் இணைப்பு செய்து கட்டிடத்தினை இடிக்கவும், மீதமுள்ள 28 எண்ணம் சேதமடைந்த மினிபவர் பம்பு கட்டிடங்களை இடித்துவிட்டு புதியதாக கட்டவேண்டியுள்ளதால் தற்காலிகமாக துண்டிப்பு செய்யவதற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை மற்றும் டெபாசிட் தொகை செலுத்துவதற்கும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4.80 இலட்சதினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6018/2022/இ1

தீர்மான எண்:**310**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்51: அருப்புக்கோட்டை நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் நீர்வரத்து இல்லாத பொதுமக்களுக்கு உபயோகமில்லமல் உள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மினிபவர்பம்பு கட்டங்களை அகற்றுவதற்கு நகர்மன்ற உறுப்பினர் மற்று நகர்மன்றத்தலைவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொதுமக்கள் நலன் கருதி மேற்படி கட்டிங்களை நீக்குவது அவசியம் ஆகும். மேற்படி பணி மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.1.00 இலட்சத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6030/2022/இ1

தீர்மான எண்:**311**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்52: இந்நகராட்சியில் பொறியியல் மற்றும் இதரப்பிரிவுகளில், தமிழ்நாடு நகராட்சிகள் சட்டவிதி 15ன் கீ அவசர அவசியம் கரதி பணிகள் செய்து முடிக்கப்பட்ட விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண். | வேலை விபரங்கள் | பணிகள் செய்த நிறுவனத்தின் பெயர் | செலவு தொகை |
|---|---|---|---|
| 1 | PH Section Cleaning work JCB work | K.Kamatchirajan | 222680 |
| 2 | PH Section Corona Vacitation Camp | Sanitary Inspector (&) MHO (I/c) V.Saravanan | 75840 |
| 3 | Providing Valve Arrangememnts for Interlocking work in Madurai Road OHT in Office Camp | M.Kasivishwanathan | 91000 |
| 4 | Filling of Gravel in Various places pot Holes @ Aruppukottai Municipality | M.Kasivishwanathan | 199658 |
| 5 | 2019-2020 year credit report printing & Binding and other office particulars bookelet printing and binding charges | Sri Meenatchi printers (Prop) K.Vadivel Murugan | 35000 |
| 6 | PH Section Cleaning work JCB & Tractor at Drains and Drainage canel | Selliamman Earth Movers, Aruppukottai | 168000 |
| 7 | PH Section purchase of Bleaching powder & Lime powder | Connection, 7th floor Spencerplasa, Chennai | 1133000 |
| 8 | PH Section Corona Mega Vaccination C amp | V.Saravanan, Sanitary Inspector | 100800 |
| 9 | TN67F9587 Repair Work | Sri Manojkumar Auto Mobiles | 16900 |
| 10 | PH Section Vehicle no TN 67 BY 8537 Repair Works | Sri Manojkumar Auto Mobiles | 13700 |

| | | | |
|---|---|---|---|
| 11 | PH Section Vehicle No TN 67 E 5405 Repair Works | Sri Manojkumar Auto Mobiles | 34700 |
| 12 | PH Section Corona Mega Vaccination Camp | V.Saravanan, Sanitary Inspector | 100800 |
| 13 | PH Section Purchase of Face mask 3 layer | Tamilnadu Multipurpose Indco serve, Trichy | 122850 |
| 14 | PH Section Vehile No. TN 67 BY 8824 FC work | Sri Manojkumar Auto Mobiles | 91000 |
| 15 | PH Section Corona Mega Vaccination Camp | V.Saravanan, Sanitary Inspector | 134400 |
| 16 | PH Section Vehicle No. TN 67 E 5405 FC Works | Sri Manojkumar Auto Mobiles | 131200 |
| 17 | PH Section Purchase of Indoor fogging Machine Gas Tin Can Aersal Cyclinder | Fancy Agency, Virudhunagar | 499140 |
| 18 | Maintenance and Repair work for Engineering Quarters | M.Kasiviswanathan | 99821 |
| 19 | PH Section Vehilce No TN 67 BY 8842 FC Work | Sri Manojkumar Auto Mobiles | 87000 |
| 20 | PH Section Purchase of Corrguated box, Colour Coded bin color coded bags | Success Business lins, Chennai | 126148 |
| 21 | PH Section Vehilce No TN 67 AH 8606 FC Work | Sri Manojkumar Auto Mobiles | 149700 |
| 22 | PH Section Processing of Fresh waste 27.12.2021 to 08.04.2022 | G.Janakiraman, Sivakasi | 776100 |
| 23 | Engg. Section vehicle TN 6749212 New Exide Battery | Jaya Trading Complany | 16400 |
| 24 | PH Section Vehilce No. TN 67 BY 8820 FC Works | Sri Manojkumar Auto Mobiles | 88500 |
| 25 | Engee Section Vehile TN67 B 8965 repair work | Sri Manojkumar Auto Mobiles | 39500 |
| 26 | Supply and fixing of 15HP open well Vertical type Submercible motor pupmset at Thamiraparani CWSS | M.Kasiviswanathan | 198040 |
| 27 | Supply and Delivery of Xerox machine drum and mount transfer assembly using for office xerox machine | Soody Electronics | 17300 |
| 28 | Urban Local Body Election Exparts | V.Saravanan Sanitary Inspectory | 304815 |
| 29 | Public Health Corona mega Camp | M.Nageshwari, Aruppukottai | 158370 |

| | | | |
|---|---|---|---|
| 30 | PH Section Tn 67 BY 8520 Back bucket repair work | A.S.R.Body Works, Madurai | 34810 |
| 31 | PH Section ward Clening Works Awarness Rally | R.Nilhayananthasiva, APK | 211600 |
| 32 | PH Section அடர்வன காடுகள் அமைத்தல் பணி | கே.கோகுலன், அருப்புக்கோட்டை | 95538 |
| 33 | PH Section Proceeding unit Garbage waste Clean by JCB Machine | முருகேஷ், J.P.Moto point | 720000 |
| 34 | PH Section Cleaning work at seval kanmai to pavadi thoppu by Hitachi Machine | Malar Clean & Green PVT Ltd., | 577500 |
| 35 | PH Section Cleaning Work at Virudhunagar Road, Pavadithoopu and Railway Feeder road by Hitachi machine, JCB and Tractor | Malar Clean & Green PVT Ltd., | 574000 |
| 36 | PH Section Purchase & Printing IEC Activities | Nithayananthasiva | 291050 |
| 37 | PH Section Garbage Cleaning works at nehru nagar JCB & Tractor | K.Kamatchirajan | 285000 |
| 38 | PH Section (6MCC) Collection dilay Wastage mesurment Black board | Vertrivel Computer sticker, apk | 25200 |
| 39 | PH Section Garbage Cleaning work at Railway Feeder road both sides by hitachi, JCB and Tractor | Malar Clean & Green PVT LTD., | 533000 |
| 40 | Purchase and Installatcion of Gas Chlorine Electronic scale (2nos) in Madurai road Tank | SRS Weighing Scale & Service, Rajapalayam | 63654 |
| 41 | Public Health Corona Vaccination magar Camp | R.Karthikeyan vel catering | 207560 |
| 42 | PH Section Garbage Cleaning work at weavers colony by Hitachi, JCB & Tractor | Malar Clean and Green PVT LTD | 410000 |
| 43 | PH Section Garbage Cleaning work at SBK School light road by Hitachi, JCB & Tractor | Malar clean & Green PVT LTD., | 410000 |
| 44 | PH Section purchase of Battery for vehilce No. TN 67BY 8824 | Jaya Trading Company, Madurai | 4000 |
| 45 | Azadi ka amrit Mahotsav (AKAM) 75வது சுதந்திரத்திருநாள் அமுதப்பெருவிழா (Stap) தமிழக அரசின் உத்தரவு ந.கஎண்.2425/சி2/2021-15 நாள் 27.05.2022 அனைத்து வீடுகளிலும் தேசியகொடி ஏற்றுதல் பணி (கொடி வழங்குதல்) | Ramya Textiles 65-A3 Pampalamman Kovil 1street, Cettiyapatti-Dhalavaipuram, Virudhunagar District | 525000 |
| 46 | PH Section Purchase of Basic Medical | Ganesh Pharma | 104944 |

| | | | |
|---|---|---|---|
| | Apparatus for UPHS | Distributors | |
| 47 | PH Section mega Corona Vaccination camp | R.Karthikeyan Vel Catering, Aruppukottai | 207560 |
| 48 | PH Section Hitachi Cleaning work at Malaiarasan Kovil road odai | Malar Clean of Green PVT Ltd., | 492000 |

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண்.1620/2017/இ1

தீர்மான எண்:**312**

பதிவுசெய்யப்பட்டது.

பொருள்53: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அண்ணாசிலை பின்புறம் மற்றும் காந்திநகர் புறநகர் பேருந்து நிலையத்திலும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஏடிஎம் இயந்திரம் வைப்பதற்கு 8"x8" என்ற அளவில் மாத வாடகை அடிப்படையில் காலியிடம் வழங்கக்கோரி வைரம் எஜென்சி நிறுவன உரிமையாளர் திரு.ஆர்.சரவணன் என்பவர் விண்ணப்பித்துள்ளதன் அடிப்படையில் மேற்படி ஏடிஎம் இயந்திரம் வைப்பதற்கு அண்ணாசிலை பின்புறம் கிழக்குப் பகுதியிலும் மற்றும் காந்திநகர் புறநகர் பேருந்து நிலையத்தின் தெற்கு புறத்திலும் 8"x8" என்ற அளவில் இடம் ஒதுக்கிதரவும், அதற்கான தரைவாடகை மாதம் ஒன்றிற்கு ரூ.2500/- வீதம் தனித்தனியே நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதி வழுங்கலாம்.
2. ஆணையாளர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் குறிப்பின் பேரிலும், பொதுமக்களின் பயன்பாட்டினை கருத்தில் கொண்டும் மேற்படி ஏடிஎம் இயந்திரம் அமைப்பதற்கு தரைவாடகை மாதம் ஒன்றிற்கு ரூ.2500/- வீதம் தனித்தனியே நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5436/2022/அ1

தீர்மான எண்:**313**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்54: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு கசடு கழிவு சுத்திகரிப்பு மையம் செயல்பட்டுவருகிறது. ஏற்கனவே சுத்திகரிப்பு மையம் செயல்படுவதற்கு நகர்மன்றத்தில் அனுமதிக்கப்பட்ட நாளில் இருந்து 24.06.2022ம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது. (Sri Shridi Sai Construction) இருப்பினும் நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட நிறுவனம் மூலம் தொடர்ந்து ஒரு வருட காலத்திற்கு (ஏற்கனவே உள்ள செலவு தொகையின்படியே) பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதியும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலககுறிப்பு:-**</u>

ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணிகாலம் 24.06.2022ம் தேதியுடன் முடிவடைந்தது. தற்சமயம் 25.06.2022 முதல் பார்த்து வரும் பணிக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5993/2022/எச்1

தீர்மான எண்:**314**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்55: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–எப், பிளாக் – 11 நகரளவை எண் 24/1 (சர்வே எண் 216/3) 7769.90 ச.மீ. (1.92) ஏக்கர் பரப்பளவில் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் கோரி திரு.க.சுப்புராம் மற்றும் ஷா.முகமதுஆஷிக் என்பவர் விண்ணப்பத்தின் பேரில் நகர் ஊரமைப்புத்துறை இயக்குர், விருதுநகர் அவர்களின் ம.வ/ந.ஊ.வ.இ(விருமா) எண் 70/2022 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவில் நகராட்சிக்கு காலியிடம் மற்றும் சாலைகளை அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 5759/2022, நாள் 30.08.2022 நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர், விருதுநகர் வழியாக நகராட்சிக்கு மனுதாரரால் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தானமாக பெறப்பட்ட இடத்தை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிகலாம். ந.க.எண்.2358/2022/எப்1

தீர்மான எண்:**315**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்56: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரை ரோடு மகாராணி தியேட்டர் அருகில் நகராட்சிக்கு சொந்தமான பயன்பாடு இல்லாத மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி தொட்டிக்கட்டிடத்தில் மின் இணைப்பு பெற்று புறக்காவல் நிலையமாக பயன்படுத்த உதவி பொறியாளரின் அறிக்கையில் மன்றத்தின் அனுமதி பெற தெரிவிக்கப்பட்டுள்ளதன் பேரில்

அதன்படி மதுரை ரோடு மகாராணி தியேட்டர் அருகில் நகராட்சிக்கு சொந்தமான பயன்பாடு இல்லாத மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கட்டிடத்தில் ஒழுங்கு மற்றும் குற்றச்சம்பவங்களை தடுக்கும் விதமாக புறக்காவல் நிலையமாக பயன்படுத்தவும் மின் இணைப்பு பெறவும் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மன்றம் அனுமதிக்கலாம்.

**நிபந்தனைகள்**

1. மேற்படி கட்டிடம் நகராட்சிக்கு தேவைப்படும் போது எவ்வித இடையூறும் செய்யாமல் உடனடியாக காலி செய்து ஒப்படைக்கப்படவேண்டும்
2. நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை உரிமை கொண்டாடக்கூடாது

ந.க.எண்.5123/2022/எப்1

தீர்மான எண்:**316**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்57: அருப்புக்கோட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவிற்கு சொந்தமான வாகனங்கள் MDR4013 & TNR2124, MDR2830 & MDR 4159, TNR3209 வாகனங்கள் வாங்கப்பட்டு 42 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. மேற்படி வாகனங்கள் பயன்பாடற்று சிதலடைந்த நிலையில் உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 08.08.2022ம் தேதிய கடிதத்தில் நகராட்சியில் பயன்பாடற்ற நிலையில் உள்ள வாகனங்களை கழிவு செய்து ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட வாகனங்களை கழிவு செய்து ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி குடிநீர் வாகனங்களுக்கான தற்போதைய சந்தை மதிப்பீடு வழங்க அரசு பனிமனைக்கு கடிதம் அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4596/2022/இ1

தீர்மான எண்:**317**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி
நகர்மன்ற தலைவர்
அருப்புக்கோட்டை நகராட்சி

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி